தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.09.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## பாரம்பரிய பனிவரகு இரகங்களில் மதிப்புக் கூட்டுதல் குறித்த பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், பயிர் மேலாண்மை இயக்ககம் சார்பில் பன்னாட்டு நிறுவனமான கிராண்ட் செலஞ்சு கனடா நாட்டின் நிதியுதவியுடன் ''பாரம்பரிய பனிவரகு இரகங்களில் மதிப்புக் கூட்டுதல்'' என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சி 22.09.2025 அன்று நடைபெற்றது. இந்த பயிற்சி நிகழ்ச்சியில் முனைவர் செ. கோகிலவாணி, உதவி பேராசிரியர் (வேளாண் வானிலையியல்) அவர்கள் வரவேற்று, பாரம்பரிய பனிவரகு சாகுபடியில் காலநிலை மாற்றத்திற்கான முக்கியத்துவத்தை விளக்கினார். பயிற்சியின் பிரதான நோக்கம், பாரம்பரிய பனிவரகு இரகங்களின் சாகுபடி மற்றும் அவற்றை மதிப்புக் கூட்டுவதன் பயன்கள் பற்றியதாகும்.

இந்நிகழ்ச்சியை பயிர் மேலாண்மை இயக்குநர், முனைவர் எம்.கே.கலாராணி அவர்கள் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். அவர் சிறுதானிய பயிர்களுக்கான மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களின் பயன்கள் மற்றும் தமிழ்நாட்டின் சிறுதானிய பயிர்கள் அதிகளவில் உற்பத்தியாகும் சிறப்பு மண்டலங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மைய பேராசிரியரும் தலைவருமான முனைவர் நா.க.சத்தியமூர்த்தி அவர்கள், காலநிலை தகவல்களின் பயன்பாடு மற்றும் பனிவரகு சாகுபடி செய்முறைகள் குறித்து எடுத்துரைத்தார். அறுவடை பின்சார் தொழிற்நுட்ப மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் சு. கார்த்திகேயன் அவர்கள், சங்க இலக்கியங்களில் சிறுதானிய பயிர்களின் பயன்பாடு பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து பல்வேறு தொழிற்நுட்ப உரைகள் மற்றும் செய்முறை பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஏற்காடு, சேலம் மாவட்டத்தை சேர்ந்த 20 விவசாயிகள் பங்கேற்றனர். மேலும், இத்திட்டத்தின் கீழ் பரம்பரிய நெல் இரகங்களில் மதிப்புக்கூட்டப்பட்டு தயார் செய்யப்பட்ட சத்துமாவை இப்பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் நிறைவாக முனைவர் ப. கீதா அவர்கள் நன்றியுரையாற்றி மதிப்புக்கூட்டுதல் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் தன்னுடைய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**